VISIT…

கடவுள் யாருக்குச் சொந்தம்?

கடவுள் நம்பிக்கை என்பது ஒரு அத்வானியாலோ, அப்துல் சமதினாலேயோ ஏற்படுத்தப் படுவது அல்ல.

பள்ளி வாசல் - சர்ச் - கோவில், இதில் எங்காவது நின்று கொண்டு வருவோர் போவோரிடம் "நீங்கள் ஏன் கடவுளை நம்புகின்றீர்கள்?" என்று கேட்டுப் பாருங்கள். நோய் நொடி, பொருளாதாரச் சிக்கல், திருமணப் பிரச்னை, பிள்ளைப் பேறு, குடும்பத் தகராறு, நம்பிக்கைத் துரோகம், விபத்துக்கள் என்று மனித வாழ்வின் துயரங்களில் தன்னுடைய பிரார்த்தனைகள் மூலம் கடவுளின் அற்புதங்களைக் கண்டதாய் ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு விதமாய்க் கூறுவதைக் கேட்கலாம்.

பிரார்த்தனையின் பலன்களைக் கண்கூடாய் காணும் அனுபவத்தினாலேயே மனிதனுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டாகின்றது.

பாபர் இந்தியாவின் முதலாவது முகலாய மன்னர். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தன் மகன் ஹுமாயூனை முஸ்லீம் மத நெறிகளின் படி தொழுகை செய்து பாபர் குணமாக்கினார். 7 ம் நூற்றாண்டில் கூன் பாண்டியன் வெப்பு நோயால் பீடிக்கப் பட்ட போது சம்பந்தன் திருநீறால் குணமாக்கினார்.

இவை வரலாற்றைத் திசை திருப்பிய உண்மைகள். உலகம் தோன்றிய நாள் முதற் கொண்டு இது போன்ற அற்புதங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. விஷய ஞானமே இல்லாத பாமரன் கூட தன் அன்றாட பிரச்னைகளில் அற்புதங்களைக் காண்கிறான். அந்த அற்புதங்களை, அனுபவங்களைக் கொண்டே கடவுளை நம்புகின்றான்.

சூரியன் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறது. மழை எல்லோருக்கும் பொதுவாய்ப் பொழிகின்றது. காற்று எல்லோருக்கும் பொதுவாய் வீசுகின்றது. கடவுள் மட்டும் எப்படி பேதப் பட்டு இருக்க முடியும்? கடவுள் கிறித்தவர்களுக்கு ஒரு மாதிரியோ, முஸ்லீம்களுக்கு ஒரு மாதிரியோ, இந்துக்களுக்கு ஒரு மாதிரியோ அருள் பாலிப்பதில்லை.

கடவுள் யாருக்குச் சொந்தம்?

அல்லாவைத் தொழுது தாயத்துக் கட்டி உடல்நலம் பெற்ற ஓராயிரம் பேரைக் காட்ட வேண்டுமா? மாரியம்மன் வரம் பெற்று ஈன்ற பிள்ளையை மடியில் போட்டுக் கொண்டு தீச்சட்டி எடுக்கும் ஆயிரம் பேரைக் காட்ட வேண்டுமா? கிறித்தவர்களின் செபக் கூட்டங்களில் குருடர்கள் பார்க்கின்றார்கள். செவிடர்கள் கேட்கின்றார்கள்.

இந்த அண்டம் அதிசயமானது. வானம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், புமி என்று எத்தனையோ அதிசயங்கள் கொண்டது. அத்தனை அற்புதங்களிலும் அற்புதமானது மனிதனின் மனமே.

இந்த மனம் தான் கடவுளுக்கும் நமக்கும் இடையே உள்ள சொந்தம். இந்த மனம் தான் கடவுளுக்கு அருகில் நம்மை அழைத்துச் செல்கிறது. இந்த மனதைப் பக்குவப்படுத்தி கடவுளை நோக்கி அழைத்துச் செல்லும் வாகனமே மதம் எனப்படுகிறது.

மதுரைக்கு நாம் செல்லவேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொண்டால் கார், பஸ், வேன், ஸ்கூட்டர் என்று பலவிதமான வாகனங்களில் எதில் பயணம் செய்தாலும் மதுரையை

அடைந்து விடலாம். எந்த வாகனமும் இன்றி நடந்தே கூட அடைய முடியும். ஒருவன் எந்த வாகனத்தில் மதுரை வந்தாலும் மதுரை தன்னுடைய சீரையும் சிறப்பையும் அவனுக்கு வாரி வழங்குகின்றது. மதுரை அவன் எந்த வாகனத்தில் வந்தான் என்று எண்ணிப் பார்ப்பதில்லை.

வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம், நன்மை, தீமை, சொர்க்கம், நரகம் இவையெல்லாவற்றையும் எல்லா மதத்திற்கும் பொதுவாய்த் தான் வைத்துள்ளார் கடவுள். நாம் எந்த மதத்தின் மூலம் அவரை வந்தடைந்தோம் என்று எண்ணிப் பார்ப்பதில்லை. மனிதன் எவரேனும் மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்தால் அவர் தன் மனதை ஒன்றுபடுத்த எந்த மத நெறியை கடைபிடித்தாலும் அவர் தம் பிரார்த்தனையை கடவுள் நிறைவேற்றி வைக்கின்றார்.

இதுவே படைப்பின் ரகசியம்.

மனம் ஒன்றிச் செய்யப்படும் பிரார்த்தனைகளின் மூலம் அற்புதங்கள் நிகழ்கின்றன. இதை நம்புங்கள். இது பகுத்தறிவுக்கு முரணானது அல்ல. ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த அனுபவங்களில் காணும் அற்புதங்களே இதனுடைய ஒரே சாட்சி. இதை வேறு வழிகளில் நிரூபிக்க இயலாது.

ஒவ்வொரு மனிதனின் மனமும் சுயமான சிந்தனைகள், தனிப்பட்ட வகையில் உருவாகும் உணர்ச்சிகள் அதன் மூலம் உண்டாகும் கொள்கைகள் கொண்டு இயங்குகிறது. எல்லோரது மனமும் ஒரே வழியில் செயல்பட்டு, ஒரே சிந்தனை, ஒரே உணர்ச்சி, ஒரே கொள்கை என்று ஆகியிருந்தால் நாம் என்றோ ஆட்டு மந்தைகளாய் ஆகியிருப்போம். அறிவு, ஆற்றல் என்ற வார்த்தைகளெல்லாம் மனித இனத்திலிருந்து அஸ்தமனமாயிருக்கும்.

மனிதன் சாதனை படைக்க வேண்டும். எனவே தான் ஒவ்வொரு மனிதனின் மனமும் வெவ்வேறு வழிகளில் இயங்குகிறது. எல்லோர் மனதையும் ஒரே வழியில் செலுத்த முடியாது. அப்படி செய்ய நினைப்பதும் கூடாது. இந்த அடிப்படையை என்று மனிதன் உணருகின்றானோ அன்றே உலகில் நடக்கும் அத்தனை மதக் கலவரங்களும் முடிவுக்கு வந்து விடும்.

மனித மனத்துக்கு அளப்பரிய சக்தி இருக்கிறது. அது கடவுள் நமக்குக் கொடுத்தது. எனவே கடவுள் நம் எல்லோருக்கும் சொந்தம். கடவுளைப் பற்றிச் சொல்லப்படும் தத்துவங்கள் - அவருக்குக் கொடுக்கப்படும் உருவங்கள் - அவரை அடைய வகுக்கப்படும் மதங்கள் அத்தனையும் உண்மைகளே. அவை நம் மனதை பக்குவப்படுத்தி ஒருமுகப்படுத்தி நம்மை கடவுளை அடையும்படி செய்கின்றன.

கடவுள் எத்தனை பேர்?

உதாரணமாக இந்து மதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆதிசக்தி - அதிலிருந்து பிரம்மா - விஷ்ணு - சிவன், அவர்களுக்கு சரஸ்வதி - லட்சுமி - பார்வதி மற்றும் பிள்ளையார் - முருகன்.

இவர்களுக்குக் கீழே இந்திரன், நவக்கிரகங்கள், ஐம்பூதங்கள், இதற்கும் கீழே சொல்லப் போனால், குல தெய்வங்கள், மாரியம்மன்கள், எல்லையம்மன்கள், அய்யனார் கருப்பணன் போன்ற தெய்வங்கள்.

இது தான் ஆதியிலிருந்து இந்தியாவில் இருந்து வரும் தெய்வ நம்பிக்கை.

ரிக் வேதம், "ஏகம் சத்; விப்ர பஹூத வதந்தி" என்று எடுத்த எடுப்பிலேயே ஆணித்தரமாய்க் கூறுகின்றது. இதற்குக் கடவுள் ஒருவரே, ஞானிகள் அவரைப் பல பெயரிட்டு அழைக்கின்றார்கள். என்பது பொருள்.

இந்தப் பிரபஞ்சம் நாம் நினைக்கும்படி அவ்வளவு சிறியதல்ல. கடவுளின் சக்தி மனிதனின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மார்க் போட்டு அவனை நரகத்திலோ, சொர்க்கத்திலோ தள்ளும் வாத்தியார் வேலை போன்று அவ்வளவு சிறியதல்ல.

கடவுள் ஒருவரே! ஆனால் இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் அவர் வெவ்வேறு விதமாய்த் தம்மை வெளிப்படுத்துகின்றார். தினம் தினம் ஒரே சமயத்தில் எத்தனை கோடி மக்கள் தங்கள் பிரச்னைகளுக்காகக் கடவுளை நோக்கிக் கையைத் தூக்குகின்றார்கள்? அத்தனை கோடி மக்களும் வெவ்வேறு வழிகளில் கடவுளைத் தினம் உணர்ந்து கொண்டே தான் இருக்கின்றார்கள்.

குப்பன் கூழுக்காக அழும் போது அவனுக்குச் சோறு போடும் சுப்பன் மூலம் தன்னை வெளிப்படுத்தும் கடவுள், ராமு நோய்வாய்ப்பட்டிருக்கும் போது சோமு என்னும் மருத்துவன் மூலம் தன்னை வெளிப்படுத்துகின்றான். கடவுள் ஒருவரே! பல நேரங்களில், பல வடிவங்களில், பல இடங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றார்.

நம் இந்தியா ஒரே நாடு. இங்கு நடப்பது ஒரே அரசாங்கமே. ஜனாதிபதி - பிரதமர் - முதலமைச்சர் - தலைமை நீதிபதி - கலெக்டர் - நகராட்சி - பஞ்சாயத்துத் தலைவர்கள் - போலீஸ் அதிகாரிகள் இவர்கள் அனைவரும் இந்த அரசாங்கத்தின் அதிகாரத்தை வெவ்வேறு பதவிகளின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எப்படி இந்திய அரசாங்கத்தில் நம் தேவைகளை தெரு கவுன்சிலரிலிருந்து ஜனாதிபதி வரை யாரை வேண்டுமானாலும் அணுகி பலனை அனுபவிக்க முடியுமோ, அது போல் நம் பிரார்த்தனைகளை நம் இஷ்ட தெய்வம் யாரை வேண்டுமானாலும் அணுகி பலனை அனுபவிக்க முடியும்.

கடவுள் நம்மைத் தண்டிப்பாரா?

இயற்கையில் படைக்கப்பட்டு உள்ள அத்தனையும் நேர்த்தியாக வகுக்கப்பட்டு விதிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட தன்மைகளுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

கதிரவன் காலையில் உதிப்பான். நீர் ஆவியாகி மேலே செல்லும். பின் குளிர்ந்து மேகமாகி மழை பெய்யும். பயிர்கள் உண்டாகும். உயிர்களுக்கு உணவு கிடைக்கும்.

இப்படித் தான் தெளிவாய் வரையறுக்கப்பட்ட விதிகளின் படி இயற்கை இயங்கிக் கொண்டிருக்கின்றது. பஞ்சும் நெருப்பும் பற்றிக் கொள்ளுமென்றால் நிச்சயம் பற்றிக் கொள்ளும். இது தான் விதி.

எல்லாம் விதிப் படி நடக்குமென்றால் இந்தக் காலத்தில் நாம் ஏதோ அறியாமையில் உளறுவதாய்க் கூறுகின்றார்கள். ஆனால் இந்த விதிகளைக் கடவுளாலேயே மாற்ற முடியாது. மாற்றவும் அவர் விரும்புவதில்லை. ஏனென்றால் விதிகளை வேளா வேளைக்கு மாற்றிக் கொண்டிருந்தால் செருப்புக்கு ஏற்றார்போல் காலை வெட்டிக் கொள்ளும் கதையாய் சிருஷ்டி தத்துவமே சீரழிந்து விடும்.

இந்த இயற்கையில் காணப்படும் அத்தனையும் ஒரு இயக்கத்தில் இருக்கின்றது. இயங்காப் பொருள் இந்த அண்டத்தில் இல்லை. இவ்வாறிந்த இயற்கையில் நடைபெறும் எந்த ஒரு செயலும் எதிர் செயலை உண்டு பண்ணும் தன்மை உடையது.

நியூட்டனின் விதி ஒவ்வொரு செயலும் தன் தன்மைகளுக்குச் சம விகிதத்தில் எதிர் செயலைத் தோற்றுவிக்கின்றது என்று கூறுகின்றது.

நாம் வாழ்கின்றோம், பேசுகின்றோம், பார்க்கின்றோம், கேட்கின்றோம், உண்ணுகின்றோம், உறங்குகின்றோம். எந்த நேரமும் ஏதாவது ஒரு செயலைச் செய்து கொண்டே இருக்கின்றோம். விஞ்ஞானம் கண்டறிந்த இயற்கையின் விதிப்படி, நமது ஒவ்வொரு செயலும் தன் தன்மைகளுக்குச் சமமான எதிர் செயலை ஏற்படுத்தியாக வேண்டும். இல்லையென்றால் விஞ்ஞான விதியே தப்பு என்றல்லவா ஆகி விடும்?

இதைத் தான் நம் முன்னோர்கள் நாம் செய்யும் பாவம் புண்ணியம், அதற்குரிய பலனை நாம் அனுபவிப்போம் என்று கூறியுள்ளார்கள். தீதும் நன்றும் பிறர் தர வாரா.

தெளிந்த அசையாத நீரில் ஒரு கல்லை விட்டெறிந்தால் அலைகள் தோன்றி மீண்டும் கல் விழுந்த மையத்தையே திருப்பி தாக்குகின்றன. அது போல் நாம் இந்த பூமியில் ஏற்படுத்தும் எந்த ஒரு அதிர்வும், மீண்டும் நம்மையே வந்து தாக்குகின்றன. இது தான் இயற்கையின் விதி.

இந்த விதியைக் கடவுளும் மாற்ற முடியாது. இதை மாற்றவும் அவர் விரும்புவதில்லை.

நாம் பாவம் செய்கின்றோமா, புண்ணியம் செய்கின்றோமா என்று பார்த்துக் கொண்டிருப்பது தான் கடவுளின் வேலை என்று எந்த மதவாதியாவது கூறினால் அதை நம்பாதீர்கள். பாவம் செய்தால் அக்னி கடல், புண்ணியம் செய்தால் சொர்க்கம் என்று கூறப்படும் கதைகள் நம்மைப் பண்படுத்த சொல்லப்படுபவை.

அன்பே கடவுள் - கருணையே கடவுள் என்று கூறிக் கொண்டு நாம் பாவம் செய்தால் கடவுள் நம்மை அக்னிக் கடலில் தள்ளி தண்டிப்பார் என்று கூறுவது அறியாமை ஆகும். சிருஷ்டி தத்துவத்தின் படி நாம் நல்லது செய்தால் நல்லது நடக்கும். கெட்டது செய்தால் கெட்டது நடக்கும். இந்த விதியின் பயனை நாம் அனுபவித்தே ஆக வேண்டும். இதில் கடவுள் தலையிடுவதில்லை.

ஒரு மனிதனுக்குத் தேவை இருந்தால் ஒழிய அவன் இயங்க மாட்டான். சோதனைகள், சாதனைகள், ஏற்றத் தாழ்வுகள் அத்தனையும், இயக்கத்தை உண்டாக்க கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை என்று வேதங்கள் சொல்கின்றன. வஞ்சகரின் சூதும் நானே என்று கிருஷ்ணன் கூறுகின்றான் கீதையில்.

தீமைகள் இருந்தால் தான் நன்மையை அடைய மனிதன் இயங்குவான். கெட்டவர்களுக்கு ஏற்படும் கேடினைப் பார்க்கும் போது தான் நல்லவனாய் மாறி அதை அழிக்க மனிதன் முற்படுகின்றான். இது தான் சிருஷ்டியின் ரகசியம்.

இவ்வாறு நல்லவர்களையும், கெட்டவர்களையும் தானே சிருஷ்டித்து நாளை தானே அவர்களைச் சொர்க்கத்திலும் நரகத்திலும் தள்ளி தண்டிப்பேன் என்று கடவுள் கூறினால் அது நியாயம் தானா? தர்மம் ஆகுமா?

இங்கு நடப்பவை அனைத்தும் அப்பட்டமான வெறும் நாடகம்.

அவனன்றி ஒரு அணுவும் அசையாது. கடவுள் சர்வ சக்தி படைத்தவர். அவர் கதை எழுதி, வசனம் எழுதி, டைரக்சன் செய்யும் திருவிளையாடலே சிருஷ்டி. திரைக் கதையை வேளா வேளைக்கு, ஆளாளுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டே போனால், அதற்குக் காரணம் - ஆரம்பத்திலேயே கதையைச் சரியாக எழுத வில்லை என்று அர்த்தம். அந்த மாதிரி

தவறு செய்பவரா கடவுள்? கடவுளிடமுமா தவறு இருக்கும்?

இதுவே சிருஷ்டி. உலகம் சிருஷ்டிக்கப் பட்ட போதே அதன் முடிவும் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அப்படி நிர்ணயிக்கப்படவில்லை என்றால் சிருஷ்டி கடவுளை மீறிப் போய்விட்டது என்று அர்த்தம். அப்படி போனால் தான் கடவுள் அதில் தலையிட்டு நியாயம் தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

இது ஒரு திருவிளையாடல். கிரிக்கெட் பந்தயங்களை நாம் தான் நடத்துகின்றோம். ஆனால் நமக்கு நாமே உருவாக்கிக் கொள்ளும் விதிகளுக்கு ஏற்ப தான் பந்தயத்தை நடத்துகின்றோம். டெண்டுல்கர் முதல் பந்தில் டக் அவுட் ஆகிவிட்டார் என்பதற்காக நாம் ஏற்படுத்திய கிரிக்கெட் விதிகளை - நமக்கு உரிமை இருந்தாலும் மாற்றி அமைப்போமா?

அது போலத் தான் - போர் புரிய வேண்டிய நேரத்தில் நாம் என்ன தான் முயன்றாலும் இயற்கையின் விதிகள் நம்மைக் கட்டுப் படுத்தி போரில் ஏவும். இதைக் கடவுளாலும் மாற்ற முடியாது. மாற்றவும் அவர் விரும்பவில்லை.

கடவுள் எங்கே இருக்கின்றார்?

கடவுள் நம்மைப் படைத்தார்.

காலை விடிகின்றது. சூரியன் உதிக்கின்றது. மாலை வருகின்றது. நிலா உலா வருகின்றது. நாம் பிறக்கிறோம். வாழ்கிறோம். இறக்கிறோம்.

இப்படியாக இயற்கையில் காணப்படும் எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கு இருக்கின்றது. சொல்லி வைத்து செய்வது போல ஒரு கட்டுப்பாடு இருக்கின்றது. இந்த நேர்த்தியான அமைப்பே யாரோ நம்மைப் படைத்தார்கள் என்று பறை சாற்றிக் கொண்டிருக்கின்றது.

ஒரு கல் சும்மா கிடந்தால் அதை யாருமே தேட மாட்டோம். அந்தக் கல் நேர்த்தியாய், சிற்பமாய்ச் செதுக்கப்பட்டால் தான் சிற்பியைத் தேடுவோம். அது போல் தான் இயற்கை நேர்த்தியாய்ச் செதுக்கப்பட்டிருப்பதால் நாம் கடவுளைத் தேடுகிறோம்.

படைக்கப்பட்டுள்ள நாமும், இந்த இயற்கையுமே கடவுள் இருக்கின்றார் என்பதற்கு ஒரே சாட்சி. கடவுளை வேறு வழியில் நிரூபிக்க முடியாது.

இந்தக் கடவுள் எங்கே இருக்கின்றார்?

கடவுள் ஏதோ மேக மண்டலத்துக்கு அப்பால் சொர்க்கத்தில் இருக்கிறார் என்றால் அதை நம்பி விடாதீர்கள். அதே போல் மாய மந்திரம் செய்பவன் தான் கடவுள் என்று யாரேனும் நினைத்தால் அதை மூட்டை கட்டி வைத்து விடுங்கள்.

பயிர் நட்டு, தண்ணீர் ஊற்றி வளர்த்தால் மாங்காய் கிடைக்கும். மந்திரத்தால் மாங்காய் வருவதில்லை.

இவ்வாறு கடவுளின் செயல்கள் அத்தனையும் நேர்த்தியாய் தீர்க்கமான செயல்பாடுகள் கொண்டிருப்பதால் கடவுளை விஞ்ஞான ரீதியாய் சுட்டிக் காட்ட முடியும். அது பாவச் செயலும் அல்ல.

பூமி ஒரு காந்தம். எனவே அதற்கு ஈர்ப்பு சக்தி இருக்கின்றது. அந்த ஈர்ப்பு சக்தி நம் எல்லோரையும் கணப்பொழுது தவறாது ஈர்த்துக் கொண்டே இருக்கின்றது.

பூமி மட்டும் அல்ல. சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் அத்தனையும் காந்தங்களே. இந்தக் காந்தங்கள் ஒன்றையொன்று ஈர்த்துக் கொள்வதால் தான் வான் வெளியில் அந்தரத்தில் நிற்கின்றன. இயங்கவும் செய்கின்றன.

இந்த அண்டத்தில் உள்ள அத்தனை பொருட்களும் எப்படி காந்தமாய் ஆகின?

இந்த அண்ட வெளி ஒரு காந்த மண்டலம். ஒரு காந்த மண்டலத்துக்குள் ஈர்க்கப்பட்ட நிலையில் இருக்கும் அத்தனையும் காந்தமாய் ஆகி விடுகின்றன என்று விஞ்ஞான விதிகள் கூறுகின்றன. அதனால் தான் அண்டவெளி என்னும் காந்த மண்டலத்துக்குள் உள்ள சூரியன், சந்திரன், பூமி, நட்சத்திரங்கள் அத்தனையும் காந்தமாய் ஆகியதுடன் ஒன்றையொன்று ஈர்த்துக் கொண்டு அந்தரத்தில் நிற்கின்றன.

இதிலிருந்து மிக் மிகத் தெளிவாய் ஒன்று புலப்படுகின்றது. கடவுள் அண்டவெளியில் தன்னை ஒரு காந்த சக்தியாய் வெளிப்படுத்துகின்றான் என்பதே அது.

அண்ட வெளியில் பூமியால் ஈர்க்கப்பட்ட நிலையில் இருப்பதால் தெரிந்தோ தெரியாமலோ நாம் ஒரு காந்தமாகவே ஆகி விட்டோம். எனவே தான் நம் உடலில் மின் காந்த அலைகள் உண்டாகின்றன. இந்த மின் காந்த அலைகளே ந்மது மூளை, இதயம் ஆகியவற்றைச் செயல் பட வைக்கிறது.

சுருக்கமாய்ச் சொன்னால்,

கடவுள் ஒரு மிகப் பெரிய காந்தம், அவரது காந்த மண்டலம் என்னும் அண்ட வெளியில் காணப்படும் சூரியன் முதற்கொண்டு சாதாரண மனிதன் வரை அத்தனையும் உயிர் பெற்று, ஒளி பெற்று இயக்க நிலை அடைகின்றன. அது தான் கடவுள் தத்துவம்.

ஒரு காந்தம் ஒரு பொருளின் மையத்தையே ஈர்க்கின்றது என்று விஞ்ஞான விதிகள் கூறுகின்றன. அப்படியென்றால் கடவுள் என்னும் காந்தம் நம் உடலின் மையத்தைத் தானே ஈர்க்கவேண்டும்?

அப்படியென்றால் நம் உடலின் மையம் எது? இதைத் தான் நம் முன்னோர்கள் குண்டலினி, மூலாதாரம் என்று கூறுகின்றார்கள். முதுகு எலும்புகளுக்குள்ளே தண்டு வடத்தின் கீழே "Cauda Equinae" என்று விஞ்ஞானத்தால் அழைக்கப்படுகின்ற முக்கோணமே நம் உடலின் மையம் - குண்டலினி.

கடவுள் நம் மூலாதாரமாகிய குண்டலினியில் இருந்து செயல் புரிகிறார். அவர் பாவிகள் என்று யாரையும் கண பொழுது கூட ஒதுக்குவதில்லை. காந்த சக்தியின் மூலம் அவர் பால் ஈர்த்தே வைத்திருக்கிறார். எப்போதும் நம்முடனே இருக்கின்றார்.

கடவுள் எப்படி இருப்பார்?

அவதாரங்கள், மகான்கள், தீர்க்கதரிசிகள், நபிகள், புனிதர்கள் ஏராளம் பேர் கடவுள் பற்றிய விழிப்புணர்வை மனிதனிடம் ஏற்படுத்தினார்கள்.

ஆனால்,

யார் செய்த பாவமோ தெரியவில்லை, கடவுளைப் பற்றிய தெளிவான சிந்தனை மனித இனத்திற்கு ஏற்படவே இல்லை. ஒவ்வொருவரும் யானையைத் தடவிப் பார்த்த குருடர்களைப் போல தத்தம் கொள்கைகளே உண்மையானவை என்று எண்ணிக் கொள்கிறார்கள்.

இது விஞ்ஞான யுகம். நம் முன்னோர்கள்-ஞானிகள், கடவுளைப் பற்றிக் கூறிய அனைத்துத் தத்துவங்களையும், அவை எந்த மதத்துக் கொள்கையாய் இருப்பினும் விஞ்ஞான ரீதியாய் அலசி ஆராய்ந்து கடவுளின் தன்மைகளைப் பற்றி ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும். இப்படியாக இருப்பவர் தான் கடவுள் என்று அறுதியிட்டுக் கூற வேண்டும்.

கடவுள் ஆதி அந்தம் இல்லாதவர். இதில் எந்த மதத்திற்கும் பேதம் இல்லை. ஆக, ஆதி அந்தமில்லாத ஒன்றைக் கடவுள் என்று கூறுவது தவறில்லை தானே!.

இந்த அண்டத்தின் மிக நுண்ணிய பாகம் அணு எனப்படும். நாம் காணும் சூரியன், சந்திரன், பூமி, மனிதன் அத்தனையும் கணக்கிலடங்கா அணுக்களின் வெவ்வேறு கூட்டணித் தொகுப்புக்கள். இந்தத் தொகுப்புக்கள் இயற்கையால் இஷ்டம் போல மாற்றி அமைக்கப்படுகின்றது.

ஒரு அணு இன்று ஒரு தானியத்தில் இருக்கலாம். நாளை அதை உண்ட பிராணியிடம் இருக்கலாம். பின்னொரு நாள் அந்தப் பிராணியைச் சமைத்துச் சாப்பிட்ட மனிதனிடம் இருக்கலாம். மனிதன் இறந்த பின்பு மண்ணோடு மண்ணாகலாம். இதெல்லாம் இயற்கையின் இஷ்டம்.

ஆனால் இந்த அண்டத்தில் ஆதியில் எத்தனை அணுக்கள் இருந்தனவோ அத்தனை அணுக்கள் தான் இன்றும் இருக்கின்றன. புதிதாய் ஒரு அணு கூட உண்டாகவில்லை. பழையதாய் ஒரு அணு கூட அழிந்து போகவில்லை. ஒரு அணுவை ஆக்கவோ அழிக்கவோ முடியாது. ஏனென்றால் அணுவிற்கு ஆதியும், அந்தமும் கிடையாது.

ஒரு அணுவைப் பிளந்தால் ஹிரோஷிமா, நாகசாகி போன்ற நகரங்களை அழிக்கலாம். ஆனால் அந்த அணுவை அழிக்க முடியாது. இன்றைய அணுக்களின் கூட்டுத் தொகுப்பாகிய பூமி, மனிதன், சூரியன், சந்திரன் அத்தனையும் நாளை அழிந்து போகலாம். ஆனால் அத்தனை அணுக்களும் வேறொரு தொகுப்பாய் ஆகி இருக்கும்.

கடவுள் ஆதி அந்தம் இல்லாதவர் என்றால் இந்த அணுவை ஏன் கடவுள் என்று அழைக்கக் கூடாது?

கடவுளின் மிக மிக மிக நுண்ணிய வடிவம் அணு. நானும் கடவுள், நீயும் கடவுள், நாம் காண்பதெல்லாம் கடவுள்.

இந்த அண்டம் ஒரு அணுக்கடல். இந்த அணுக்கடலில் ஏற்படும் சுழிகள், குமிழிகள் போன்றவை தான் நாமெல்லாம். அணுக்கடலின் அலைகள் ஓயாது. ஆனால் அந்த அலைகளின் இன்றைய தொகுப்புக்கள் அனைத்தும் அழிந்து வேறொரு புதிய தொகுப்பு தோன்றும். ஆனால் இந்த அணுக்கடல் அழியவே அழியாது. கடவுளை அழிக்க முடியுமா?

கடவுள் - உண்மை எது?

கடவுளின் மிக நுண்ணிய வடிவம் அணு என்று பார்த்தோம். இந்த அணுக்களில் ஏற்படும் இயக்கமே சிருஷ்டி எனப்படும். இந்த அண்டத்திலுள்ள அத்தனை அணுக்களும் ஓயாத இயக்கத்தில் இருக்கின்றன. இந்த இயக்கத்தின் மாறுபட்ட வேகமே படைப்பின் பல்வேறு தோற்றங்களாய் காட்சியளிக்கின்றன.

பூமி மணிக்கு 2000 கி.மீ. வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொள்கின்றது. சூரியனோ மணிக்கு 10 கோடி கி.மீ. வேகத்தில் சுற்றிக் கொள்கிறது. இப்போது பூமி சூரியனைப் போல மணிக்கு 10 கோடி கி.மீ. வேகத்தில் சுற்றி விட்டால் பூமியின் நிலையும்

சூரியனைப் போல் ஒரு நெருப்புக் கோளமாய் ஆகி விடும். ஒரு சிலந்தி வலை மிகவும் நுண்மையானது. ஆனால் இந்த சிலந்தி வலையை அதி பயங்கர வேகத்தில் செலுத்தினால் அதைக் கொண்டு ஒரு மரத்தையே அறுத்து விடலாம்.

ஒரு பொருள் திடப் பொருளாகவோ, திரவமாகவோ, வாயுவாகவோ இருப்பதற்குக் காரணம் அப்பொருளில் உள்ள அணுக்களின் இயக்கத்தில் ஏற்படும் மாறுபட்ட வேகமே காரணம். இன்று நம் உடலை ஒளியின் வேகத்தில் செலுத்தினால் நாம் நாமாக இருக்க மாட்டோம். நாமும் ஒளியாகவே மாறி விடுவோம். இதுவே சிருஷ்டி!

இப்போது நான் சொல்வதைக் கேளுங்கள். மிரண்டு விடாதீர்கள். எப்படி நாம் ஒளியின் வேகத்தில் சென்றால் ஒளியாகவே மாறி விடுவோமோ, அதைப் போன்றே நம் இயக்கத்தின் வேகத்தை நிறுத்தினால் இந்த அண்டத்தில் இருக்கும் ஒரே ஒரு பொருளாகிய பரம்பொருளாகவே மாறி விடுவோம்.

இத்தத்துவம் விஞ்ஞான பூர்வமானது. சும்மா எடுத்துக்காட்டி எழுதப்பட்டதல்ல. வேதங்கள் எடுத்த எடுப்பிலேயே - 'தத்வமசி' - நீயே அது என்று கூறுகிறது.

மீண்டும் சொல்கிறேன். இயக்கமே சிருஷ்டி. இந்த சிருஷ்டி கற்பனைக் கெட்டாத பிரம்மாண்டமான வேகத்தில் நம்மை இயக்கிக் கொண்டிருக்கிறது. இந்த அண்டத்தின் ஒரே பொருளாகிய கடவுளை இந்தக் கற்பனைக் கெட்டாத வேகம் நம்மிடம் இருந்து பிரிக்கின்றது. எப்போது நாம் இந்த சிருஷ்டியின் வேகத்தில் இருந்து விடுபடுகின்றோமோ அப்போது கடவுளின் உண்மை நிலையை உள்ளபடி கண்கூடாகப் பார்க்க முடியும்.

60 கி.மீ. வேகத்தில் செல்லும் ஒரு பேருந்திலிருந்தே நம்மால் குதிக்க முடியவில்லை. மணிக்கு 2000 கி.மீ. வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, வினாடிக்கு 66000 கி.மீ. வீதம் சூரியனைச் சுற்றி வரும் பூமியின் வேகத்திலிருந்து எப்படிக் குதிக்க முடியும்? இதெல்லாம் சாத்தியம் தானா என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கின்றது.

சத்தியமாய் இது சாத்தியமே. இதை எடுத்துரைப்பதே ஆன்மீகம் ஆகும்.

சிருஷ்டி நம்மிடம் எந்த விளைவினை ஏற்படுத்துகின்றது என்று யோசித்துப் பாருங்கள். ஐம்புலன்கள்-அதன் காரணமாய் - ஆசைகள், இன்பங்கள், துன்பங்கள் எக்ஸ்ட்ரா. இப்போது இந்த ஐம்புலன்களையும், அதன் காரணமாய் மனசையும் - அதன் காரணமாய் எழும் ஆசையையும் வென்று விட்டால் (புத்தன்) அது சிருஷ்டியை வென்றதாகத் தானே அர்த்தம். சிருஷ்டியைத் தாண்டிக் குதித்ததாகத் தானே அர்த்தம்.

ஐம்புலன்களைத் தாண்டுவது தான் கடவுளை அடையும் ஒரே வழி. அதற்குரிய வைராக்கியத்தையும், சக்தியையும் ஆன்மீகம் நமக்கு அளிக்கின்றது. அந்தக் கடினமான முயற்சியை நம் முன்னோர்கள் எளிமையாக்கித் தந்துள்ளனர். அதையடுத்த அத்தியாயங்களில் கூறுகின்றேன்.

கடவுளைக் காண்பது எப்படி?

மரத்தடியில் படுத்திருந்த நியூட்டன் நெற்றியில் ஒரு ஆப்பிள் விழுந்தது. இக்கனி ஏன் மேல் நோக்கிச் செல்லாது கீழ் நோக்கி வந்தது என்று நியூட்டன் தன்னுள் கேள்வியை எழுப்பினார். முடிவு புவி ஈர்ப்பு சக்தியை அறிந்தார்.

அவர் கேள்விக்குப் பதில் எங்கிருந்து கிடைத்தது? வானத்திலிருந்து விழுந்ததா? அல்லது மண்ணுக்குள்ளிருந்து முளைத்ததா? நியூட்டன் கேள்வியை யாரிடம் கேட்டார்? யார் அவருக்குப் பதில் அளித்தார்கள்? அவர் கேள்வியைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டார்.

பதில் அவர் உள்மனதில் இருந்து வெளிப்பட்டது.

நெய்வேலியில் வெளிப்படும் மின்சாரம் பெரிய பெரிய தொழிற்சாலைகளை இயக்கலாம். ஊரையும் உலகையும் பிரகாசிக்கச் செய்யலாம். பூஜ்ஜிய பல்பையும் எரிய வைக்கலாம். அனைத்தும் ஒரே மின்சாரமே. இந்த அண்டத்தில் வெளிப்படும் கடவுளும் பெரிய நட்சத்திரமாக இருக்கலாம். இதோ இந்தப் பூமியில் முடங்கிக் கிடக்கும் நம்மிடம் வெளிப்படுவதும் அதே கடவுள் தான். எவ்வாறு மின்சாரங்கள் என்று சொல்ல பன்மையாகச் சொல்ல முடிவதில்லையோ, அதே போல் கடவுள்கள் என்றும் பன்மையாகச் சொல்ல முடியாது.

எப்படி பூஜ்ஜிய பல்பைத் தொட்டால் மொத்த மின்சாரத்தின் தன்மைகளையறிய முடியுமோ அதே போல் நம் உடலில் ஓடும் உயிரைத் தொட்டு கடவுளின் மொத்த தன்மைகளையும் நாம் கண்டறிய முடியும். இந்த அண்டத்தின் அனைத்து ரகசியங்களுக்கும் பதில் நம் மனதின் ஆழத்தில் பத்திரமாய் இருக்கின்றன. எப்போது ஐம்புலன்களையும் மறந்து ஒரே சிந்தனையாய் அதே சிந்தனையாய் நாம் எந்தக் கேள்வியை எழுப்பினாலும் பதில் நிச்சயம் கிடைக்கும், நியூட்டனுக்குக் கிடைத்தது போல.

ஆர்க்கிமிடீஸ் அரசனின் தங்கக் கிரீடத்தில் கலப்படம் இருக்கின்றதா என்பதை எப்படிக் கண்டறிவது என்ற ஒரே சிந்தனையாய் தொட்டிக்குள் இறங்கிய போது அவர் மனம் அவருக்குப் பதில் கொடுத்தது. ஆடையணியாமல் இருக்கிறோம் என்பது கூட தெரியாமல் யுரேகா என்று கூவிய படி அரசனிடம் ஓடினார். அந்தளவு ஐம்புலன்களை மறந்த நிலையில் அவர் இருந்தார்.

அதே போல், ஐம்புலன்களை மறந்த நிலையில், பசியைப் பொருட்படுத்தாது தூக்கத்தைச் சட்டை செய்யாது, சுற்றி என்ன நடக்கின்றது என்ற நினைவே இல்லாது, உங்களின் ஒவ்வொரு அணுவும் உண்மையான வேட்கையுடன் இந்த அண்டத்தில் எதைத் தேடினாலும் அதற்குப் பதில் உடனே கிடைக்கும்.

இவ்வாறு தத்துவ ஆராய்ச்சியில் எவன் தன் ஐம்புலன்களையும் மறந்த நிலையில் ஈடுபடுகின்றானோ அவன் காண்பான். அப்படிப்பட்டவர்களை அன்று ரிஷிகள் என்றோம். இன்று விஞ்ஞானிகள் என்கிறோம்.

எப்படி கடவுளை அடைவது என்று தீவிர விசாரணையில் தமக்குள் ஈடுபடுவதே ஞான யோகம் என்று அழைக்கப்படுகிறது. அப்படி இறங்கினால், புத்தருக்குப் போதி மரத்தில் கிடைத்த ஞானம் உங்களுக்கு உங்கள் வீட்டு அடுப்படியில் கூட கிடைக்கும்.

இல்லறமா துறவறமா?

ஐம்புலன்கள் அடக்கமாய் இருந்தாலொழிய கடவுளை உணரமுடியாது என்பதை நாம் அறிந்தோம்.

குடும்பம், சமுதாயம், நாடு என்ற சிருஷ்டியில் சிக்கித் திணறும் நமக்கெல்லாம் அது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல என்று யாரேனும் சொன்னால் நம்பி விடாதீர்கள்.

பற்றை விட்டால் தான் பரமனை அடைய முடியும் என்று யாரும் உபதேசித்தால் பதறாதீர்கள்.

ஆசை, கோபம், அஹங்காரம் என்ற சிருஷ்டியின் அனைத்து உணர்ச்சி வெள்ளத்திலும் அடித்துச் செல்லப்படக்கூடிய சந்தர்ப்பம் அமையப் பெற்றுள்ள அத்தனை

இல்லறத்தாருக்கும் எதிர் நீச்சல் போட ஒரு எளிய படகை கடவுள் அளித்துள்ளான். நம் உள்ளத்தில் எழும் எல்லா ஆசைகளையும் அறுத்தெறிய இறைவன் ஒரு இலகுவான ஆயுதம் அளித்துள்ளான்.

அது தான் அன்பு, தூய அன்பு, பரந்த அன்பு.

ஆம். அன்புடையவர்கள் சுயநலம் அற்றவர்களாய் இருப்பார்கள். ஒருவனுக்குச் சுயநலம் இல்லையென்றால் அவன் தன் ஐம்புலன்களையும் வென்று விட்டான் என்று தானே அர்த்தம்.

தூய அன்பு யாரையும் துன்புறுத்தாது. பரந்த அன்பு எந்த பஸ்ஸையும் கொளுத்தாது. தன்னலமற்ற அன்பு எதையும் எதிர்பார்க்காது.

வம்பு பிடித்த அன்பு ஒன்று இருக்கிறது. ஜாதி, மதம் என்ற குறுகிய வட்டத்திற்குள் சுற்றிக் கொண்டிருக்கும். இதன் பெயர் வெறி. இதை நான் சொல்ல வில்லை.

வேஷம் போடும் அன்பு ஒன்று இருக்கிறது. யாரிடமாவது பணம், பதவி, பகட்டு இருந்தால் அதைச் சுற்றி வரும். அதன் பெயர் அரசியல் அதை நான் சொல்ல வில்லை.

எதிர்பார்க்கும் அன்பு ஒன்று இருக்கிறது. யாராவது ஏதாவது தந்தால் வாலை ஆட்டும். அதன் பெயர் சுயநலம். அதை நான் சொல்லவில்லை.

உங்கள் தாயை நேசியுங்கள். தந்தையை நேசியுங்கள். பிள்ளைகளை நேசியுங்கள். உங்கள் தெருவை நேசியுங்கள். ஊரை, நாடை, இந்த உலகை நேசியுங்கள்.

இந்த உலகில் நடக்கும் அத்தனை குற்றங்களும் அன்பு ஒன்று குறைவதால் வரும் செயல்கள்.

தன் தாரத்தை மட்டும் நேசிப்பவன், தந்தை தாயை கொடுமை செய்கிறான். தன் மதத்தை மட்டும் நேசிப்பவன் தரணியையே கொடுமை செய்கிறான்.

அன்பு கொடுக்கக் கொடுக்கக் குறையாதது. ஒருவன் அன்பின் வழி செல்லும் போது ஐம்புலன்களையும் வென்று விட்டான் என்று பொருள். இது புரியவில்லையென்றால் தன்னலமற்ற ஒரு தாயை ஆராய்ந்து பாருங்கள். ஒரு தன்னலமற்ற தந்தையை சந்தித்துப் பாருங்கள். ஒரு தன்னலமற்ற தலைவனைத் தட்டிப் பாருங்கள்.

நன்றாக யோசித்துப் பாருங்கள்.

யாருக்காகவும் இந்த உலகம் நிற்கப் போவதில்லை. ஒரு தந்தை தான் இல்லையென்றால் தன் குடும்பம் நிர்க்கதியாய் சிதைந்து விடும் என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்தத் தந்தையின் திடீர் மரணம் அவன் இழப்பை அந்தக் குடும்பம் தாங்கிக் கொள்ளும் என்று நிரூபித்துக் காட்டும். ஆக தந்தை என்ற ஸ்தானம் அவனுக்கு அந்த நேரம் அளிக்கப்படும் ஒரு கௌரவமே.

ஆமாம் நமக்காக இந்த உலகம் என்றுமே காத்திருக்காது. அது தன்பாட்டுக்குத் தன் வழியே போய்க் கொண்டிருக்கும். நீ இப்போது இருக்கும் நிலை இந்த உலகத்தில் உனக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பம். எனவே உன் கடமைகளை உனக்குக் கிடைத்த பாக்கியமாய் செய்து முடி. நீ அவ்வாறு செய்யவில்லையென்றால் அதற்காக உலகம் நஷ்டமடைந்து விடாது. நீ தான் கஷ்டப் படுவாய்.

எனவே உன் கடமைகளை தன்னலமற்ற சேவையாய்ச் செய். நீ நிச்சயம் கடவுளை உணர்வாய். கடவுளாய் உணர்வாய்.

தூய அன்பு, பரந்த அன்பு, அன்பு - இதுவே கர்ம யோகம்!

(குருட்டு) பக்தியா?

பயம் மனிதனின் அடிப்படை உணர்ச்சி.

இந்த பய உணர்ச்சி இருப்பதால் தான் நம்மில் பல பேர் நல்லவர்களாக இருக்கின்றார்கள். தாய் தந்தைக்குப் பயந்து கீழ்ப்படிபவன் பண்புள்ளவனாய் வளர்கின்றான். கணவனுக்குப் பயந்து நடக்கும் மனைவியும் மனைவிக்குப் பயந்து நடக்கும் கணவனும் நாகரீகமான சமுதாயத்தைப் படைக்கின்றார்கள்.

நான் சொல்லும் பயம் அன்பினால் ஏற்படும் பயம். தன் உயிர் மேல் ஆசை - உடைமைகள் மீது ஆசை - எதிர்பார்க்கும் சுகத்தின் மீது ஆசை ஆகியவற்றால் ஏற்படும் பயத்தைச் சொல்லவில்லை. அன்பினால் ஏற்படும் பயம் பக்தி எனப்படும். ஆசையால் ஏற்படும் பயம் அடிமைத்தனம் எனப்படும்.

பக்தி, தன்னுடைய இன்ப - துன்ப - சுக - துக்கம் அத்தனையையும் இழந்து நிற்கத்தயாராய் இருக்கும்.

இந்த பக்தி இருக்கிறதே! அப்பப்பா. இதைச் சொல்லியோ எழுதியோ புரிய வைக்க முடியாது. அனுபவிக்க வேண்டும்.

நம் ஐம்புலன்களின் ஆசையை நம்மை அறியாமல் நாமே அடக்கி ஆள நம்மைப் பக்குவப்படுத்துவது பக்தி ஒன்றினால் மட்டுமே முடியும்.

ஒரு பக்தனைப் பொருத்தவரை அவனவனின் இஷ்ட தெய்வம் தான் இந்த உலகத்தைப் படைத்த பரம் பொருள். சர்வ வல்லமை பொருந்திய ஆதி சக்தி. இந்த முகமூடியை அவன் போர்த்தி விடுவதால் அவன் தனக்குக் கிடைக்கும் இன்பங்களையெல்லாம் அந்த தெய்வம் தந்த வரப்பிரசாதமாக ஏற்றுக் கொள்கின்றான். துன்பங்களை அந்த தெய்வம் தந்த சோதனைகளாக எண்ணிக் கொள்கின்றான்.

இவ்வாறு எண்ணிக் கொள்ளும் மனப்பக்குவம் தான் புலன் அடக்கத்தின் முதல் படி. அவனைப் பொருத்தமட்டில் அவனுடைய தெய்வம் பாவம் செய்பவர்களைத் தண்டிக்கவும், புண்ணியம் செய்பவர்களை சொர்க்கத்தில் சேர்த்து விடும். இந்த சிந்தனையால் அவன் பாவம் செய்யப் பயப்படுகின்றான்.

உண்ணா நோன்பு - மௌனவிரதம் - புலால் மறுப்பு - சொகுசு வாழ்க்கையைப் புறக்கணித்தல் - வேகும் வெயிலில் வெறும் காலுடன் பாத யாத்திரை செல்லுதல் - தகிக்கும் அனலை பூக்குழியாய் நினைத்து இறங்குதல் - உடம்பெல்லாம் ஊசி குத்திக் கொண்டு ஊர்வலம் வருதல் - அக்னி சட்டி ஏந்துதல் என்று பக்தன் தன்னை வருத்திக் கொள்வதை எட்டி நின்று வேடிக்கை பார்க்கும் நமக்கு ஏளனமாய் - மூடத்தனமாய்த் தெரியலாம்.

ஆனால் - இந்த மாதிரியெல்லாம் செய்வதற்கு அவர்கள் அனுஷ்டிக்கும் விரதங்களையும் - உபவாசங்களையும் - வைராக்கியங்களையும் சற்றே நெருங்கிப் பாருங்கள். அதில் புலனடக்கம் என்ற தத்துவம் அற்புதமாய் அரங்கேற்றப் பட்டிருக்கும்.

இவ்வாறு தன் பக்தியில் மூழ்கும் பக்தன் தன்னைப் பித்தன் - மூடன் என்று பிறர் கூறுவதைப் பொருட்படுத்துவதில்லை. அவன் இந்த உலகத்தையே மறந்து விடுகின்றான்.

இதன் மூலம் சிருஷ்டியை அவன் வெல்கின்றான்.

ஒவ்வொரு மனித மனமும் வெவ்வேறு தெய்வங்களை தனது இயல்புக்கு ஏற்ப ஏற்றுக் கொள்ளும். இதனால் வேறு வேறு மதங்கள் தோன்றுகின்றன. இது இயற்கையான நிகழ்ச்சி. இதைத் தவிர்க்க இயலாது.

புலனடக்கம் சாத்தியமானால் கடவுளுணர்தல் நிச்சயம்.

இதுவே பக்தி யோகம்.

கடைசி ஆயுதம்

மூன்று ஆயுதங்களை இது வரை பார்த்தோம். மிஞ்சி இருப்பது ஒரே ஆயுதம். அதன் பெயர் தியானம். இதைத் தான் நம் பெரியவர்கள் ராஜயோகம் என்றார்கள்.

இப்போது ஒரு சிறு விடுகதை. பதில் சொல்லுங்கள் பார்ப்போம்.

நாம் பச்சிளங்குழந்தையாய் பிறக்கின்றோம் - சிறுவனாய் ஆகின்றோம் - வாலிப முறுக்கை அடைகின்றோம் - பின்பு வயோதிகனாய் மடிந்து போகின்றோம். இப்போது ஒரு மரத்தை எடுத்துக் கொள்வோம். அதில் ஒரு சிறு குறுத்து தோன்றுகின்றது. சிறு இலையாய் விரிகின்றது. அழகிய மிடுக்கோடு பச்சை இலையாய் ஆகின்றது - முடிவில் பழுப்பு நிறத்தை அடைந்து வாடி வதங்கி விழுந்து மடிகின்றது.

மனிதனில் அத்தனை பருவங்களையும் ஒரு சாதாரண இலையும் பிறந்து வளர்த்து அனுபவித்து இறக்கின்றது. அப்படியென்றால் மனிதனுக்கு ஒரு உயிர் இருப்பது போல் அந்த இலைக்கும் ஒரு உயிர் இருக்கின்றது என்று தானே அர்த்தம்.

இப்போது கூறுங்கள் - மரத்திற்கு இருப்பது ஒரு உயிரா? அல்லது மரம் என்பது ஆயிரக்கணக்கான இலை உயிர்களைக் கொண்ட ஒரு கோர்வையா?

ஒவ்வொரு இலைக்கும் ஒரு தனித்தன்மை இருக்கின்றது. தனிப்பட்ட பிறப்பு, இறப்பு விதி முறைகள் இருக்கின்றது. நோய் நொடி என்ற தனிப்பட்ட தொல்லைகள் இருக்கின்றது.

சரி சரி. நீங்கள் விக்கிரமாதித்தனும் அல்ல. நான் வேதாளமும் அல்ல. நான் சொல்ல வருவதை நேரிடையாகவே சொல்லிவிடுகின்றேன்.

ஏற்கனவே சொன்னது போல் அண்டத்திற்கு இருப்பது ஒரே உயிர். ஆயினும் மரத்தின் இலைகள் போல் நீங்களும் நானும் வெவ்வேறு உயிர்கள் போலக் காட்சியளிக்கின்றோம். ஒவ்வொருவருக்கும் தனித் தன்மைகள் இருப்பதாக நினைத்துக் கொள்கிறோம். வெவ்வேறு பிறப்பு இறப்பு உடையவர்களாய்க் கூறிக் கொள்கிறோம்.

வேரிலிருந்து நீர் மர உச்சிக் கிளையின் நுனிக் குறுத்து வரை எளிதில் சென்றடைவது போல் இந்த அண்டத்தின் அத்தனை மின் ஓட்டமும் இந்த விநாடியில் பிறக்கும் பச்சிளங்குழந்தை வரை எளிதில் ஓடிக் கொண்டு தான் இருக்கின்றது.

அந்த மின் ஓட்டத்தை நம் கையால் எட்டிப் பிடிப்பதற்குப் பெயர் தான் தியானம்.

வெளி உலக விஷயங்களில் நம் புலன்கள் தறிகெட்டு அலைந்து நம்மை தாறுமாறாய் ஆக்கி விடுகின்றன. அந்த புலன்களைத் தடுத்து நிறுத்தி கட்டுப்படுத்தி உள்நோக்கி திருப்பி வேரிலிருந்து இலை நுனி வரையுள்ள் அந்த இணைப்பு வழியைக் கண்டறிந்து அதில் இரண்டறக் கலந்து கடவுளை உணர்வதே தியானத்தின் சிறப்பம்சம். நேரிடையில் இது கடவுளுடன் நம்மைத் தொடர்பு படுத்தி விடுவதால் யோகங்களிலெல்லாம் உயர்ந்த ராஜயோகம் என்றழைக்கப்படுகின்றது.

இதிலும் அந்த புலன் அடக்கமே அடிப்படையானது. ஆதாரமானது. தலையாயது.

நம் உடலில் எத்தனையோ செயல்கள் நம் உணர்வின்றியே நடைபெறுகின்றன. சுவாசித்தல் - சொரித்தல் - இருதயத் துடிப்பு என்று அடுக்கிக் கொண்டே போகலாம். சுவாசித்தலே நாம் உயிர் வாழ்வதில் பிரதானமாகும். அந்த சுவாசித்தலை நம் உணர்வுக்கு உட்பட்டதாய் ஆக்கும் போது நம் உயிராகிய அந்த ஆத்மாவை - அண்டத்தின் மின் ஓட்டத்தை - சாட்சாத் கடவுளையே நாம் உணர முடியும். இதுவே பிராணாயாமம் ஆகும்.

இந்த உள் நோக்கு முயற்சியே தியானம் ஆகும்.

இந்த மனதை நம் மையமாகிய குண்டலினியில் குவிக்க முயற்சிப்பது பிரத்யாஹாரம் எனப்படும்.

அதில் வெற்றியடைந்து மனதை அங்கேயே நிறுத்தி வைப்பது தாரணை எனப்படும்.

இம்முயற்சிகளின் பயனாய் தியானத்தின் உயர்ந்த நிலையாகிய சமாதி (இயக்கமற்ற சிருஷ்டியை வென்ற) நிலையை யோகி அடைகின்றான். இருந்தும் இல்லாத நிலையான இதுவே பேரின்பம் ஆகும்.

கடவுள் உண்மை எது?

கடவுள் ஆதி அந்தம் இல்லாதவர் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எனவே ஒரு தொடக்கமோ முடிவோ இல்லாத ஒன்றை நாம் கண்டறிந்தால் அதையே கடவுள் என்று கூறுவது தவறாகாது.

ஆகவே கடவுளின் நுண்ணிய தன்மை அணு தான் என்பது சாதிப்பது சரியே. அணுவாய் அண்டத்தில் தன்னை வெளிப்படுத்தும் கடவுள் சிருஷ்டி என்னும் சுழற்சி வேகத்தினால் பல்வேறு உயிர்களாய்த் தோன்றுகின்றான். இதையே நம் முன்னோர்கள் மாயை என்றழைத்தார்கள்.

எனவே கடவுளுக்கும் நமக்கும் உள்ள இடைவெளியே இந்த இயக்கம் தான். என்று நாம் நம்மிடம் காணப்படும் இயக்கத்தை நிறுத்தி விடுகின்றோமோ அன்றே நாம் கடவுளாக முடியும்.

கடவுளை எங்கோ வான மண்டலத்திற்கு அப்பால் வெகு தொலைவில் உள்ளவராய் நம்மை எண்ணத் தூண்டும் மாயையாகிய சிருஷ்டியை விட்டு நாம் வெளியே வரும் போது உள்ளபடியே கடவுளை நம்மால் அறிய முடியும்.

ஐம்புலன்களை மறந்து விட்டு கடவுளைத் தேடி (உள்ளே) அலையுங்கள். ஐம்புலன்களை மறந்து விட்டு அன்பான சேவைகளைச் செய்யுங்கள். அல்லது ஐம்புலன்களையும் செயல்களையும் கடவுளிடம் அர்ப்பணம் செய்து விடுங்கள். அல்லது

ஐம்புலன்களையும் துறந்து விட்டு தியானம் செய்யுங்கள்.

இந்த நான்கு யோகங்களையும் நாம் நானூறு கோடி விதத்தில் சாதிக்க முடியும். அது எதுவாயினும் புலனடக்கம் தான் முதல் படியாக இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு முறை மூலமோ, அல்லது ஒரு குறிப்பிட்ட மதத்தின் மூலமோ மட்டுமே கடவுளைக் காண முடியும் என்று வாதிடுவது முட்டாள்தனம். அது போன்றே புலனடக்கம் என்பதே துளியும் இல்லாமல் கடவுளை உணர்வதாய் பலர் மார் தட்டிக் கொள்வது பைத்தியக்காரத்தனம்.

மதத் தீவிரவாதிகளே! உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். உங்கள் மனதை அடக்கி விட்டீர்களா? ஐம்புலன்களினால் ஏற்படும் ஆசையை வென்று விட்டீர்களா? அப்படியென்றால் மட்டுமே கடவுளைப் பற்றி பேசுங்கள். அவர்கள் தான் மக்களுக்கு ஆன்மீகத்தின் அற்புதத்தை உணர வைக்க முடியும்.

எண்குணத்தான்.

கடவுள் உருவமில்லாதவர் என்பதே கடவுளின் முதல் பண்பு அல்லது குணம் ஆகும்.

ஆனால் நாம் கண்ணால் காண முடியாது என்ற ஒரே காரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஒன்றை உருவமில்லாதது என்று கூறுவது தவறு. கண்களுக்குப் புலப்படாத நுண்ணியிரிகளுக்கும் உருவம் இருக்கின்றது என்பது நுண்ணோக்கிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. காற்று? உருவமில்லாமலா நாளை வீசப்போகும் புயலை இன்றே படமெடுக்க முடிகிறது? ஒலி? அதற்கும் அலை வடிவம் இருக்கின்றது. அதை ஒலிநாடாவில் பதிய வைக்கவும் முடியும்.

எனவே, உருவமில்லாதது என்பதற்கு விளக்கம் என்ன என்பதை நான் தெளியப்படுத்துகின்றேன். கவனமாய்க் கேளுங்கள். நம் கண்ணுக்குத் தெரிகின்றதோ இல்லையோ அது இங்கு பிரச்னையல்ல.

எந்த பொருளுக்கு எல்லைகள் இல்லையோ - அதுவே உருவமில்லாதது என்பதே சரியான விளக்கம். இந்தியாவுக்கு வடக்கே இமயமலை - தெற்கே கன்னியாகுமரி என்ற எல்லைகளை நிர்ணயிக்கும் போது தான் அதன் வரை படத்தை உருவாக்க முடியும். எல்லைகள் தான் ஒரு பொருளுக்கு உருவத்தைக் கொடுக்கின்றன.

ஆக - உருவமில்லாத ஒன்று நிச்சயம் எல்லைகள் இல்லாததாய்த் தான் இருக்க முடியும். எல்லையில்லாத ஒன்றை எப்படி படம் வரைய முடியும். எவ்வாறு உருவம் கொடுக்க முடியும்?

எனவே தான் கடவுளை எல்லையில்லாதவர் என்று வேதம் சொல்கிறது. பின்னரே உருவமில்லாதவர் என்கிறது.

ஒரு பொருள் எல்லையில்லாமல் இருக்கும் போது மற்றொன்று எப்படி இருக்க முடியும். ஒன்றை முடியும் போது தானே மற்றொன்று தொடங்க முடியும். அந்த இன்றே எல்லையில்லாமல் விரிந்து பரந்து கிடக்கும் போது மற்றொன்றுக்கு எங்கே இடம் கிடைக்கும்?

எனவே - கடவுள் எல்லையில்லாதவர் என்று கூறியவுடனேயே அவர் ஒருவர் மட்டுமே என்று கூறுவது அவசியமாகி விடுகின்றது. நாம் வேறு கடவுள் வேறு என்று எண்ணிக் கொள்வதே எவ்வளவு அறியாமை?

நாம் கடவுளுக்கு வேறாய் இருப்பது உண்மையென்றால் கடவுளுக்கு ஒரு எல்லை இருக்கிறது என்றல்லவா அர்த்தம். அந்த எல்லைக்கு வெளியே இருந்தால் தானே நாம் வேறு கடவுள் வேறு என்று கூற முடியும்?

கடவுள் எல்லையில்லாதவர். உருவமில்லாதவர். எனவே அவர் மட்டுமே இந்த அண்டத்தில், அண்டமாய் வியாபித்திருக்கின்றார் என்று கூறுவதே சரி.

அடுத்து ஒரு அற்புதத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்.

காலம், நேரம் என்பது மற்றொன்றைச் சார்ந்திருந்து நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு ஏற்பாடு. சூரினைச் சார்ந்திருப்பதால் தான் நமக்கு 24 மணி நேரங்கள். சூரியனுக்கே இரவு பகல் கிடையாது! பின்னர் அண்டத்திற்கு காலமாவது நேரமாவது? நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்ட ஏற்பாட்டைக் கொண்டு பிரம்மாண்டாமாய் விரிந்து பரந்து கிடக்கும் இந்த அண்டத்தை அளக்க முயற்சிக்கின்றோம். எனவே கடவுளையும் கால நேர கோட்பாட்டிற்குள் திணிக்க முயற்சிக்கிறோம்.

கடவுள் எண் குணங்களைக் கொண்டவர்.

1. ஆதி அந்தமில்லாதவர்.
2. எல்லையில்லாதவர்.
3. உருவமில்லாதவர்.
4. கால நேரங்களைக் கடந்தவர்.
5. அவரன்றி அண்டத்தில் வேறொன்றில்லை என்று வியாபித்திருப்பவர்.
6. பற்றற்றவர்.
7. இப்படித்தான் இருப்பார் என்று எடுத்துரைக்கத் தக்க தன்மைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிர்க்குணமாய் இருப்பவர்.
8. இடம், பொருள், காரண, காரியங்கள் இல்லாதவர்.

என்ற எட்டுக் குணங்களைக் கொண்டவர் தான் கடவுள். அவரைத் தான் திருவள்ளுவரும் எண்குணத்தான் என்று விரிக்கின்றார்.

இந்த எட்டுத் தத்துவங்களும் ஒன்றுக் கொன்று கோர்வையாய் வர வேண்டும். முரண்பாடாய் வரக்கூடாது. ஒரு தத்துவத்தை மீதி ஏழு தத்துவங்களும் விளக்குவதாய் இருக்க வேண்டும். அப்படியென்றால் அது விஞ்ஞான பூர்வமாய், மெஞ்ஞான பூர்வமாய் அறிவு சம்பந்தப் பட்டதாய் இருக்க முடியும்.

இரவு பகலே இல்லாத விண்வெளிக்கு காலம் என்ற கணக்கு எப்படி இருக்க முடியும்? தான் ஒருவராய், அங்கிங்கெனாத படி எங்கும் வியாபித்திருக்கும் கடவுள் காலத்தை எதைக் கொண்டு கணக்கிடுவார்? எதைச் சார்ந்து கணக்கிட முடியும்?

கடவுள் எங்கோ சொர்க்கத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறார் என்று கதையளந்து கொண்டு இருக்கிறோம். எல்லையில்லாத கடவுளுக்கு ஏது இடம்? இடம் என்ற ஒன்று இருப்பின், எல்லை உருவாகி விடும். எல்லை இருந்தால் உருவம் கிட்டி விடும். உருவம் இருந்தால் ஆதி அந்தம் என்ற ஆபத்து வந்து விடும்.

ஏதோ அக்னிக் கடலில் நம்மையெல்லாம் பாவிகள் என்று கடவுள் தள்ளிவிடுவாரே யானால் அந்த அக்னிக் கடலிலும் ஒரு தெய்வீகத் தன்மை இருக்கத்தான் செய்யும்.

கடவுள் பற்றற்றவர். அண்டத்தின் ஒவ்வொரு அணுவும் ஒரே அளவிலேயே

சிறப்புக்களையும் பெருமைகளையும் பெற்றவை.

ஒரு புறம் பௌதீக பொருளாய் ஸ்தூலமாய்த் தோன்றும் கடவுள் மறுபுறம் சூட்சும சக்தியாய் தோன்றுகிறார்.

அவரே அணுவாகவும் இருக்கிறார். மறு புறம் பார்த்தால் அலைவடிவாகவும் இருக்கின்றார்.

ஒரு புறம் சூரியனாய் இருக்கிறார். மறுபுறம் குப்பைமேடாய் இருக்கிறார்.

எனவே கடவுள் இருக்கிறார் என்று வாதாடவும் முடியும். இல்லையென்றும் வாதாட முடியும். எனவே தான் நாத்திகத்தையும் கடவுளை உணரும் ஏழு வழிகளில் ஒன்றாய் கருத முடிகிறது.

இந்த எண்குணங்களையும் எளிதில் எழுதி விடலாம். ஆனால் நடை முறையில் உணருவது மிகவும் கடினம். அப்படி உணருவதே உண்மையான ஞானம் (மெஞ்ஞானம்) ஆகும். இது எல்லோருக்கும் சித்திக்குமா?

இவையனைத்தையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்க முடியும். ஆனால் நிரூபிக்க முடியாது. ஏனெனில் நிரூபிக்கத் தகுந்த கருவிகளை நம்மை விட்டு அலை பாய விட்டிருக்கின்றோம். நமது பகுத்தறிவு, காலம், நேரம், உருவம், எல்லைகள், இடம், காரண காரியம், குணம், பற்று, தனித்தன்மைகள் என்ற குறுகிய வட்டத்தை மையமாக வைத்து இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே இதற்கு மாறுபட்டதெல்லாமே நம்மைப் பொருத்த வரை பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டதாய் தான் இருக்க முடியும். ஆனால் என்ன செய்வது? கடவுளின் குணங்களே இதற்கு மாறுபட்டு இருப்பது தானே?

நமது இந்த இயலாமையை நம்முடைய இந்த பலவீனத்தை ஜெயிக்கவே கடவுளுக்கு சில உருவங்களை முன்னோர்கள் கற்பித்தனர்.

மனமது செம்மையானால்.

ஒரு கல்லை இரண்டு துண்டுகளாக்கி, ஒன்றை வாசற்படியாகவும், மற்றொன்றைச் சிலையாகவும் மதிக்கின்றோமே இது மூடத்தனமா?

கறி சமைத்த பின், அதைச் சமைக்க உதவிய சட்டியும், சட்டுவமும் தேவையில்லாதது. அது போல நமது மனதைச் சமைக்க உதவும் சிலைகள் நம்முள் தான் இறைவன் இருக்கின்றான் என்று தெளிந்த பின் தேவையில்லாதது தானே?

அதே சமயம் சட்டியும், சட்டுவமும் இல்லாமல் எப்படி கறி சமைக்க முடியும்? அதே மாதிரி வெளி அடையாளமே இல்லாது எவ்வாறு மனதை செம்மைப் படுத்த முடியும்?

ஆதி சங்கரர் இங்கு அனைத்துமாய் காட்சியளிப்பது ஒரே பரம்பொருள் என்னும் அத்வைத கொள்கை கொண்டிருந்தார். ஸ்ரீராமானுஜரோ நாமெல்லாம் கடவுளின் அங்கங்கள் என்னும் விசிஷ்டாத்வைதக் கொள்கை கொண்டிருந்தார். மத்வாச்சாரியாரோ, கடவுள் வேறு, ஜீவன்கள் வேறு என்னும் த்வைதக் கருத்துகளைக் கொண்டிருந்தார். புத்தரோ, மறந்து கூட கடவுளைப் பற்றி பேசவில்லை. ஆனால் அவரையே கடவுளாக்கி நம்மவர்கள் கலவரங்களைச் செய்கிறார்கள்.

கடவுள் ஒருவரே என்னும் உண்மையை உணர்ந்தவர்கள் மனம்

செம்மையடைந்தவர்கள். எனவே உருவ வழிபாடும் ஒரு மார்க்கமே.

ஆதி - அந்தம்.

விஞ்ஞானம் இன்று வெற்றி நடை போடுகிறது. எதை அறிந்தால் பிறகு எல்லாவற்றையும் அறிந்ததாய் அர்த்தம் தெரியுமா? அந்தக் கேள்வி இது தான்.

"பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதை நிறுத்திக் கொண்டால் அதன் நிலை என்னவாகும்?"

சுக்கு நூறாய் உடைந்து போகும்? சிதறிப் போகும்? சூரியனில் போய் விழும்? எரிந்து விடும்? என்றெல்லாம் பதில் தந்தால் பூஜ்ஜியம் தான் உங்களுக்கு மதிப்பெண் போட முடியும்.

பதில் என்னவென்றால், "பூமி மாயமாய் மறைந்து விடும்"

திட, திரவ, வாயு நிலைகளுக்கு அப்பாற்பட்ட சூட்சும நிலையை அடைந்து விடும்.

இங்கு காட்சியளித்துக் கொண்டிருக்கும் சூரியன்களும், பூமிகளும் என்றுமே இல்லாமல் இருந்ததில்லை. ஆனால் ஒடுக்க நிலையில் இயக்கம் இல்லாத நிலையில் உரு தெரியாமல் சூட்சும சக்தியாய் ஒடுங்கி இருந்தன. சிருஷ்டியின் போது சூட்சுமத்தில் ஏற்பட்ட இயக்கமே அவைகளை திட திரவ வாயு நிலைகளைக் கொண்டதாய் ஆக்குகின்றது.

அந்த ஒடுக்க நிலையை அவ்யக்தம் என்கின்றார்கள். இயக்கநிலையை சிருஷ்டி என்கிறார்கள். இயக்கம் நின்று விட்டால் அவ்யக்தம் (ஒடுக்கம்). இயக்கம் ஆரம்பித்தால் சிருஷ்டி. நிலை வேண்டுமானால் மாறுமேயன்றி, எதுவுமே அழிவதில்ல. ஏனென்றால் அதற்கு ஆரம்பம் என்ற ஒன்றும் இல்லை. இயக்கத்தில் ஸ்தூலம், ஒடுக்கத்தில் சூட்சுமம்.

ஒரு வட்டத்தில் எதை ஆரம்பம், எதை முடிவு என்பீர்கள்? எனவே தான் ஒன்றுமில்லாததற்கு, இல்லாமல் இருப்பதற்கு, '0' என்ற ஒன்றை இந்தியர்கள் கண்டறிந்தார்கள். அதன் வடிவம் வட்டம். அதற்கு இட்ட பெயர் பூஜ்ஜியம். நாம் கடவுளுக்குச் செய்வது பூஜை.

மும்மூர்த்திகள்?

ஒடுக்க நிலையில் இருந்து சிருஷ்டி நிலைக்கு வந்த போதே இந்த பேரண்டத்தின் வித்து வெளிக் கிளம்பியது. பௌதீகத் தன்மை (ஸ்தூலம்) கொண்ட அனைத்தையும் சிவனாகவும். சூட்சும்மாகிய மாயா தன்மைகள் கொண்ட அனைத்தையும் சக்தி எனவும் கொள்ளலாம். சிவன் சக்தி என்றவுடன் இந்துக் கடவுள்கள் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். வேண்டுமானால் ஸ்தூலம், சூட்சுமம் என்றே வைத்துக் கொள்ளுங்கள்.

இவைகளின் வெளிப்பாடு மூன்று விதங்களில், முக்குணங்களில் அமைந்தது.

அணுவைப் பற்றி படித்திருப்பீர்கள். புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் பற்றியும் தெரிந்திருப்பீர்கள். இதில் புரோட்டான் பாசிட்டிவ் எனவும், நியூட்ரான் நியூட்ரல் எனவும், எலக்ட்ரான் நெகடிவ் எனவும் தெரிந்திருப்பீர்கள். அணுக்களின் இயக்கம் இந்த முப்பெரும் சக்திகளாலேயே ஏற்படுகின்றது. அணுக்களின் பிளவு, சிதைவு, கலவை, கோர்வை, மூலக்கூறுகளின் தோற்றம், கூட்டுப் பொருட்களின் வெளிப்பாடு, அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய பூமி, சூரியன், நட்சத்திரங்கள் அனைத்தும் இந்த முப்பெரும் சக்திகள் ஏற்படுத்தும் மின் காந்த அலைகளினால் மட்டுமே சாத்தியமாகின்றன.

இதைத்தான் மும்மூர்த்திகள் என்று கூறுகின்றேன். இவை முறையே, ஆக்கல், காத்தல், அழித்தல் பணிகளைச் செய்கின்றன.

இதில் சூட்சுமமாய் தன்னை வெளிப்படுத்தும் ஆக்கும் சக்தி அறிவாயும் ஆசையாயும் இருக்கிறது. அறிவோ ஆசையோ இல்லாவிடில் இயக்கம்/சிருஷ்டி இல்லை. காக்கும் சக்தி அன்பாயும், கருணையாயும் வெளிப்படுகிறது. அழிக்கும் சக்தி கோபமாயும், வீரமாயும் வெளிப்படுத்துகிறது. எனவே தான் மும்மூர்த்திகளைப் படைத்த(!) நம் முன்னோர்கள் அவர்களுக்குத் துணையாக சரஸ்வதி, லட்சுமி, பார்வதி என்று சக்திகளை வைத்தார்கள்.

ஒரு விந்து எப்படி மனிதனை வெளிப்படுத்துகிறதோ, அதே போல் மனிதனும் அண்டத்தை வெளிப்படுத்துபவனாக இருக்கிறான்.

அப்படியாயின், அண்டத்தின் அந்த மாபெரும் செயல்பாடுகளும் மனிதனிடமும் இருக்க வேண்டும் அல்லவா? உண்மையில் அப்படித் தான் நடக்கிறது. ராஜசம், சாத்வீகம், தாமசம் என்னும் குண நலன்கள் மனிதனிடம் தோன்றுவதற்கு இம்மூன்று சக்திகளே காரணம் ஆகும்.

சிருஷ்டியும் சிருஷ்டி கர்த்தாவும்.

ஒரு சொட்டு ரத்தத்தில் 5 மில்லியன் சிகப்பணுக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சிகப்பணுவும் ஒவ்வொரு உயிர் என்று விஞ்ஞானம் கூறுகிறது. அதனுடைய வாழ்நாட்கள் 120 நாட்கள். இவைகள் எலும்பு மஞ்ஜையில் பிறந்து கல்லீரலில் இறக்கின்றன. இந்த வெள்ளை அணுக்கள் இருக்கின்றதே அவைகள் இரத்த ஓட்டத்தையே எதிர்த்து நீந்தக் கூடியவை. ஏதாவது கிருமிகளைக் கண்டுவிட்டால் இரத்தக் குழாய்களைத் துளைத்துக் கொண்டு வெளி வந்து போர் புரியக் கூடியவை. அவைகளுக்கு ஞாபக சக்தியும் அதிகம். ஒரு முறை அடித்து வீழ்த்திய கிருமிகளை மறுமுறை அதே வியூகத்தில் வெற்றி கொள்கின்றன.

எனவே தான் அம்மை போன்ற கிருமிகள் ஒரே முறை தான் நம்மைத் துன்புறுத்த முடியும்.

ஒரே ஒரு செல்லிலிருந்து ஒரு மனிதனை உருவாக்கி விடலாம் என்று உங்களுக்குத் தெரியும்.

இந்த விஷயத்தை மூன்று கோணங்களில் விவாதிக்கிறேன். எது சரியென்று நீங்களே தீர்மானியுங்கள்.

1. நம்மால் இரத்த தானம், கண் தானம், கிட்னி தானம் செய்ய இயலுகிறது. எனவே நம் உடலில் உள்ள அவ்வுறுப்புக்கள் நாம் இல்லையென்றாலும் அல்லது நாம் இல்லாத இடத்திலும் இயங்கக் கூடியவைகள். ஆக, நாமும் நம் உடலில் காணும் அவ்வுயிர்களும் வெவ்வேறானவைகள்.
2. நம் உடலில் உள்ள உறுப்புக்கள் அனைத்திற்கும் தனித் தனி கட்டுப்பாட்டு அறைகள் உள்ளன. உதாரணமாய் மூளை கட்டளையிட்டாலும் இதயத்தில் உள்ள பேஸ் மேக்கர் இயங்க வில்லை என்றால் இதயம் செயலிழந்து விடும். எனவே இந்த உறுப்புக்கள் அனைத்தையும் சேர்த்து கோர்க்கப்பட்டதே நம் உயிர்.
3. நம் உடலில் ஓடும் ஒரே உயிர், நம் உடலில் உள்ள அனைத்து செல்களிலும் உயிரோட்டத்தை உண்டாக்கி, அவைகளுக்கென்று தனித் தனி உயிர் உள்ளது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. இந்த உடலில் உள்ளது ஒரே உயிர். அதுவே பல உயிர்களாகக் காட்சியளிக்கிறது.

வெவ்வேறு கோணத்தில் அமைந்துள்ள இந்த 3 கருத்துக்கள் ஒவ்வொன்றையும் நியாயப்படுத்தி விவாதிக்க முடியும். நிரூபிக்கவும் முடியும்.

1. சிருஷ்டி கர்த்தாவாகிய பரமாத்மா வேறு - சிருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்மா வேறு - என்பது துவைதம்.
2. சிருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்மா - சிருஷ்டி கர்த்தாவாகிய பரமாத்மாவின் அங்கங்கள் - எனபது விசிட்டாத்வைதம்.
3. ஜீவாத்மாவும், பரமாத்மாவும் வேறு வேறு அல்ல. என்பது அத்வைதம்.

சிருஷ்டி கர்த்தாவாகிய பரமாத்மா மிகப் பெரிய பிரமாண்டமான சமுத்திரம். அந்த சமுத்திரத்தில் ஆயிரம் ஆயிரம் அலைகள் இடை விடாது தோன்றுகின்றன. அந்த அலைகளின் நடுவே தோன்றும் நீர்க்குமிழிகளே சிருஷ்டியாகிய ஜீவாத்மாக்கள். கண நேரம் மட்டுமே வாழும் அந்த நீர்க் குமிழிகள் நீர்க்குமிழிகளாக இருக்கும் வரை தான் ஜீவாத்மாக்கள். பின் அதுவும் சமுத்திரமே. பரமாத்மாவே.

சமுத்திரமே தன்னை நீர்க்குமிழியாக வெளிப்படுத்தியது. ஆனால் அதே சமயம் நீர்க்குமிழியை சமுத்திரம் என்று கூற முடியாது. அதே போல் தான், பரமாதமாவே தன்னை ஜீவாத்மாவாக வெளிப்படுத்தியது. ஆனால் ஜீவாத்மாவை பரமாத்மா என்று கூற முடியாது.

உலகத்தின் அனைத்து மதங்களுமே கடவுளும் மனிதனும் வேறு வேறானவை என்னும் துவைதக் கருத்தினை போதிக்கின்றன. மனிதனை நல்வழிப்படுத்தி அவனை தெய்வநிலைக்கு உயர்த்துவதே மதங்களின் அடிப்படை நோக்கம்.

ஆனால் இந்த துவைதக் கருத்துகள் ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்ட முடியாது.

எடுத்துக்காட்டாக, நான் பாவம் செய்கின்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். கடவுள் என்னை நாளை நரகத்தில் தள்ளி விடுவார். அது எப்படி எனக்குத் தண்டனையாக இருக்க முடியும்? அங்கு தான் ஏற்கனவே பாவம் செய்தவர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுடன் நானுமல்லவா கூட்டாகி விடுவேன். பின்பு நாங்கள் அனைவரும் மீண்டும் பாவம் செய்து கொண்டே தான் இருக்க வேண்டும். இது தான் துவைதக் கருத்துகளின் எல்லை. அது எந்தக் கடவுளைக் கொண்ட துவைதக் கருத்தாய் இருந்தாலும் சரி.

இந்த துவைதக் கருத்துகள் ஆரம்ப காலப் பாடம் தான். அதைத் தாண்டும் போது தான் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கு காரணம் என்ன என்பது புலப்படும்.

இன்பமும் துன்பமும்.

"துன்பத்திற்குக் காரணம் ஆசையே" - புத்தர்.

துன்பம் என்றால் என்ன?

ஒரு குழந்தை தான் ஆசையாய் விளையாடிய பலூன் உடைந்து விட்டால் அளவில்லா துன்பத்தை அடைகிறது. ஆனால் சில நேரங்கள் சிலர் பலூன் உடைப்பதையே விளையாட்டாய் விளையாடுகின்றனர்.

ஆக பலூன் உடைதல் என்னும் செயல் துன்பமானது அல்ல.

ஒரு ஏழை 10 ரூபாயைத் தவற விட்டால் பெரிய துன்பத்தை அடைகிறான். பணக்காரனோ நூறு ரூபாய் தொலத்தாலும் அது பற்றிக் கவலைப்படுவதில்லை.

ஒரே செயல் வெவ்வேறு நிலைகளில், வெவ்வேறு மனிதர்களிடத்தில் வெவ்வேறு உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கிறது.

துன்பம் என்பது இந்த உலகில் காணப்படும் எந்த செயலிலும் இல்லை என்பதே உண்மை. சத்தியம். அது போலவே தான் இன்பமும்.

நமது மனத்தின் எண்ணங்களும் ஆசைகளுமே இன்ப துன்பங்களை நிர்மாணிக்கின்றன.

இந்த பேரண்டத்தில் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து அற்புதமாய் இயங்கி வருகின்றன. இந்நிலையில், மனிதன் தன் மனதின் ஆசைக் கேற்ப சிருஷ்டி அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம்?

இந்த சூரிய மண்டலத்தினை பூமியளவு வரைபடத்தில் அதாவது 48000 கி.மீ. விட்டமுள்ள தாளில், உரிய அளவு திட்டத்தின் படி வரைந்தால், பூமியை ஒரு சிறிய புள்ளி அளவினதாய் கூட குறிப்பிட முடியாதாம். அந்த மிகச் சிறிய பூமியின் தூசி போன்ற மனிதன் கடவுளின் சிருஷ்டிகள் அனைத்தும் தன் மனதின் உணர்ச்சிகளுக்கேற்பட்ட மாற்றியமைக்கப் படவேண்டும் என்று விரும்புவது எவ்வளவு மூடத்தனமானது?

மனத்தின் தெளிவே இன்ப துன்பங்களை வெல்கிறது.

பிச்சை புகினும்

நாம் வீடு கட்டுகின்றோம். அந்த வீட்டுக்கு விளக்கேற்ற வயரிங் செய்கிறோம். மெயின் ஸ்விட்ச் மூலம் மின்சாரத்தை உள்ளே கொண்டு வந்து தேவைப்படும் அறைகளுக்கு கொண்டு செல்கிறோம்.

இதே அமைப்பில் தான் மனிதனும் சிருஷ்டிக்கப்படுகிறான். நமது உடலில் உறையும் உயிர் மெயின் ஸ்விட்ச். இது கடவுளிடமிருந்து மின்சாரத்தை எடுத்து உயிரோட்டத்தை நம்மிடம் ஏற்படுத்துகிறது. இவ்வோட்டம் ராட்சதம், சாத்வீகம், தாமசம் என்னும் முக்குணமயமான வயர்களால் உடலெங்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. இவை மூன்றும் முறையே ஆசை, அன்பு, கோபம் ஆகியவை.

அன்பு மட்டுமே கடவுள் என்று நினைக்கிறோம். உண்மையில் நமக்கு அன்பு எவ்வளவு தேவையோ, அவ்வளவு ஆசையும் கோபமும் தேவை. இதில் எது குறைந்தாலும் நமது இயக்கம் தடைபடும். சிருஷ்டி பாதிக்கப்படும். ஆசை நம்மைத் தூண்டி சாதனை செய்ய வைக்கிறது. சுறுசுறுப்பு, அறிவு, அந்தஸ்து, ஆற்றல் இவையனைத்தும் ஆசையின் வெளிப்பாடுகளே. அன்பு நம்மைத் தூண்டி கருணை செய்ய வைக்கிறது. இரக்கம், உபசாரம், பக்தி, அடக்கம் இவையனைத்தும் அன்பின் வெளிப்பாடுகளே. கோபம் நம்மைத் தூண்டி சீர்திருத்தம் செய்ய வழி செய்கிறது. வீரம், பற்று, வைராக்கியம், பொறாமை இவையனைத்தும் கோபத்தின் வெளிப்பாடுகள்.

நமது வீட்டில் சில சமயம் குறைந்த மின்சாரமும் வருகிறது. அதிக மின்சாரமும் வருகிறது. குறை மின்சாரத்தில் விளக்குகள் சரிவர எரிவதில்லை. அதிக மின்சாரத்தில் விளக்குகள் பஸ்மமாகின்றன.

அதே போல, ஆசை, அன்பு, கோபம் தேவையான அளவில் நம்மிடம் வெளிப்பட வேண்டும். அதைத் தேவையான அளவு காட்டத் தெரியாதவன் தற்குறி மனிதனாவான். அதிகமாய் காட்டுபவன் அழிந்து போகிறான்.

ஆசை அதிகரித்தால் பேராசை. பெருநஷ்டம்.

அன்பு அதிகரித்தால் வெறி, ஜாதி வெறி, இன வெறி, மத வெறி. பெற்றோர்களின் அளவிலா அன்பினால் கெட்டழிந்து போன குழந்தைகளை நடைமுறையில் காண்கிறோம்.

கோபம் அதிகரித்தால் அது ரௌத்ரம். அது பற்றிக் கூற வேண்டியதே இல்லை. நமது அடிப்படை குணத்தில் கோபமும் ஒன்று என்றே பலர் ஒத்துக் கொள்வதில்லை. கோபமே இல்லாத மனிதன் நிச்சயம் அழிந்து போவான். மன்னவன் கோபம் மக்களை வழி நடத்துகிறது. மக்களின் கோபம் அரசையே மாற்றியமைக்கிறது. மனைவியின் கோபம் கணவனை நல்வழிப்படுத்துகிறது. தந்தையின் கோபம் பிள்ளைகளை ஒழுங்குபடுத்துகிறது.

ஆனால் இந்த மூன்றையும், மனிதன் தக்க நேரத்தில், தக்க விதத்தில், தக்க அளவில் இதைப் பயன்படுத்த தவறுவதனாலேயே தகராறுகள் ஏற்படுகிறது.

தேவையான அறைகளில் விளக்குகள் எரிய அனுமதிப்பது போல, நம் உடலின் உயிரோட்டத்தை பக்தி, ஞானம், கருணை, காமகளியாட்டம், சமூக பணி, கல்வி, ஆராய்ச்சி என்று எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் முழு உரிமை நமக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தேவையற்ற நேரத்தில் தேவையற்ற சுவிட்சுக்களைப் போடுவதாலேயே இக்கட்டுக்களில் சிக்க வேண்டியுள்ளது.

அரைகுறை டிரைவிங் படித்தவர்கள் காரினை தாறுமாறாய் ஓட்டி விபத்தில் சிக்கிக் கொள்வது போல் நமது குணாதிசயங்களை தாறுமாறாய் பயன்படுத்தி நாம் ஆபத்தை வரவழைக்கிறோம்.

எனவே, நமக்கு எவ்வாறு வாழ்வது என்பது கற்றுத் தரப்பட வேண்டியதாகும்.

எனவே, பிச்சை புகினும் கற்கை நன்றே.

நிறைவுரை:

பூமி சூரியனைச் சுற்றுகின்றது. சூரியன் ஆகாய கங்கையைச் சுற்றுகின்றது. அந்த ஆகாய கங்கை வேறு எந்த மையத்தையோ சுற்றுகின்றது. அந்த மையத்தில் தான் இந்த அண்டம் என்னும் விடுகதையின் விடை இருக்கின்றது என்று விஞ்ஞானம் கருதுகின்றது. இதை அடைய முடியுமா? ஆகாய கங்கையின் மையத்தை அடையவே 200 மில்லியன் வருடங்கள் ஆகும். அதோடு அங்கு கோடி சூரியன் பிரகாசமாய் அக்னி ஜுவாலையாய் இருக்கிறதாம். ஒரு சூரியனையே நம்மால் நெருங்க முடியவில்லை.

பின் எப்படி இந்த மண்டத்தின் மையத்தை ஆராய்வது?

இந்த அண்டமே ஒரு காந்த மண்டலம். அவை யனைத்தும் ஒன்றையொன்று ஈர்த்துக் கொண்டு காந்தமாய் ஆகிவிட்டன. ஒன்றையொன்று ஈர்த்துக் கொண்டிருக்கும் நிலையில் உள்ள இரு காந்தங்களில் ஒன்றின் மையத்தைக் கொண்டே மற்றொரு மையத்தின் சக்தியை அறிந்து விடலாம் என்று அதே விஞ்ஞானம் கூறுகின்றது.

ஆக, அண்டத்தின் காந்த சக்தியில் ஈர்க்கப்பட்ட நிலையிலுள்ள நமது மையத்தினைக் கொண்டே இந்த அண்டத்தின் சக்தியை அளந்து விடலாம். அடைந்தும் விடலாம்.

இயக்கமே சிருஷ்டி. இயக்கத்தை நிறுத்துவதன் மூலமே இந்த அண்டத்தின் மூல வஸ்துவை அறிய முடியுமேயன்றி, ஒளியின் வேகத்தில் செல்லும் இயக்கத்தினால் அல்ல. உலகையே ஒரு நொடியில் வலம் வரும் முருகனை விட, இருந்த இடத்திலிருந்தே தான் விநாயகன் சாதித்தான் என்னும் கதையை நம்மவர்கள் எதற்காக உருவாக்கினார்கள் என்று நினைக்கிறீர்கள்?

இந்த அண்டத்தின் இயக்கம் எந்த மையத்திலிருந்து தொடங்கியதோ அல்லது இந்த அண்டம் இயக்கம் நிற்கும்போது எந்த மையத்தில் விழுமோ அதை நம்முடைய மையத்தினை இயக்கத்தை நிறுத்தி அடைவதன் மூலம் அடையமுடியும்.

அதை விடுத்து ஐம்புலன்களின் இயக்கத்திற்குப் பின்னாலேயே நாம் சென்றால் கடவுள் எட்டாத மேகமண்டலத்துக்கு அப்பால் உள்ள வானத்தில் இருக்கிறார் என்று அர்த்தம். அதே சமயம் இயக்கத்தைக் கட்டுப்படுத்தினால் அதே கடவுள் நமக்கு மிக மிக அருகில், ஏன்? கடவுளைத் தவிர வேறில்லை என்னும் உண்மையையும் நம்மால் உணர முடியும்.

மரணத்தின் மூலம் இந்த இயக்கமற்ற நிலையை சாதிக்க இயலுமா? இயலாது. ஏனென்றால் ஜனனம், மரணம் என்னும் இந்த இரண்டுமே இயக்க நிலையாகிய சிருஷ்டியின் இரு பெரும் அத்தியாயங்கள்.

விரிந்து பரந்த அண்டமே மிகச்சிறிய பிண்டமாய் இந்த மனிதனாயும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

அண்டத்தின் விளைவே பிண்டம். பிண்டத்தை விட்டு தாண்டிக் குதித்தாலே அண்டத்தையே தாண்டிக் குதித்தது தான்.

எனவே, ஐம்புலன்கள், மனம், புத்தி, நான் என்னும் அகங்காரம் இவற்றை எவ்வழியாயினும், எம்மதத்தின் மூலமாகவேனும் அடக்கி ஆண்டு ஜெயித்துக் காட்டுங்கள்.

மீண்டும் சொல்கிறேன். கடவுளை உணருங்கள். கடவுளாய் உணருங்கள்.